# நிலாத்தமிழ்

ச. அமிர்தநாதர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PILLAI TAMIL

# பிள்ளைத் தமிழ்

275528

ச. அமிர்தநாதர்

275528

கலைமன்ற வெளியீடு
நுவரெலியா.

VIJAYALUCKSHMI BOOK DEPOT
248, Galle Road,
WELLAWATTE
T/PHONE 88930.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிய
இளம்
நெஞ்சங்களுக்கு
இத் தமிழ்
படையல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு: 1970

உரிமை ஆசிரியருக்கே.

அச்சுப் பதிவு:

அசோகா அச்சகம்,
இருகலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் நினைவில் நிலைத்த எண்ணம் ஓரளவு நிறைவெய்திப் 'பிள்ளைத் தமிழாக' வெளிவருகின்றது.

இந்நூல் பிள்ளைப் பருவங் கூறும் பிரபந்தமன்று.

எதிர்காலத்தில் கனிந்து சிறக்க இருக்கும் இளம் நெஞ்சங்களுக்கு இத்தமிழ் இனிமை பயக்கும் என்பது எனது துணிபு.

இயற்கை, வாழ்வு, வாழ்த்து எனும் முப்பிரிவுகளை அடக்கிய இந் நூலின் கண் உள்ள கவிதைகளில் பெரும்பாலானவை இடை நிலை வகுப்புகளுக்கே ஏற்றவையாகும்.

அன்புடன் அணிந்துரை அளித்து ஆசி நல்கிய தமிழறிஞர் வித்துவான் F. X. C. நடராசா அவர்களுக்கு எனது அன்புகனிந்த நன்றி.

ச. அமிர்தநாதர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரின் பிற நூல்கள்.

அழகு

குலமலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்துரை

## தமிழறிஞர் வித்துவான்
## F. X. C. நடராசா அவர்கள்
### அரசகரும மொழித்துறை, கொழும்பு.

உள்ளத் துள்ளது கவிதை — இன்பம்
உருவெ டுப்பது கவிதை;
தெள்ளத் தெளிந்த தமிழில் — உண்மை
தெரிந்து ரைப்பது கவிதை.

இவ்வாறு கவிதைக்கு இலக்கணங் கூறப்பட்டிருக்கிறது. உள்ளத்திலிருந்து பெருகி வழிவதே இலக்கியம் எனப்பட்டிருக்கிறது. ஆகவே கவிதை தான் இலக்கியம் "உவட்டாதஊண யாதுணர்வெனும் பசியெடுத்துள்ளமுஞ் செவியும் உருகிநின்றுண்ணும் பெருந்தமிழமுதம்" என்ற நல்லுரைக்கேற்ப திரு. ச. அமிர்தநாதர் "பிள்ளைத் தமிழ்" என்னும் பெயர்வாய்ந்த கவிதைத் திரட்டொன்றினை நவமாய் இயற்றி இன்பத் தமிழன்னை களிகூர நற்றமிழ் பேசும் மக்கள் இதயம் பூரிக்க வெளிப்படுத்துகின்றார்.

இந்தப்பிள்ளைத் தமிழ் பிரபந்தவகையைச் சார்ந்த பிள்ளைத்தமிழ் அன்று. சிறு பிள்ளைகளுக்கு இயற்கை, இறைவன் ஒழுக்கம் முதலாம் விடயங்களைப்பற்றி அழகு தமிழில் சிறுவர்க்குப் புலப்படும் வகையில் கவிதைகள் இயற்றப்பட்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அடுத்தது காட்டும் பளிங்குபோல்' என்ற திருவாக்கிற்கிசையக் "கண்ணாடி" என்ற தலைப்பில் அதன் இயல்பை ஏற்றிச் சிறுபிள்ளைகள் தங்கள் இதயத்தை அப்பழுக்கற்ற நிலையில் வைத்திருத்தல் வேண்டுமென்று ஆசிரியர் எடுத்துக்காட்டுகின்றார்.

உள்ளதை உள்ளதாய்க் காட்டி எதையும்
உடனே திருத்தும் கண்ணாடி
எள்ளள வேனும் அழகு கலையின்
எடுத்துக் கூறும் கண்ணாடி

என்றும்,

தனியெவர்க் கேனுமோர் சலுகையுமீயாத்
தன்மையாம் நேர்மைக் கண்ணாடி
அனைவர்க்கும் பொதுவாய் அவர்நிலை விளக்கி
அரும்பணி யாற்றும் கண்ணாடி

என்றும்

கண்ணாடியின் பெருந்தன்மைகளை எடுத்துக்காட்டிப் பிள்ளைகளும் சூது, வஞ்சனை, பொய் முதலிய துர்ப்பழக்கங்களினின்கி நடக்கப் பழகவேண்டுமென்பதை மறைமுகமாக எடுத்தியம்பியுள்ளார், ஆசிரியர்.

உள்ளக் கதவைத் திற
அங்கே
உன் உணர்வில்
இறைவன் விழிப்பான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ஆசிரியர் பக்தி மிடுக்குடன் இறைவனை யடையும் வழியை எழில் பெற அமைத்துக்காட்டியுள்ளார்.

இவ்வாறு "இழுமென் மொழியால் விழுமியது" கூறி நற்றமிழன்னைக்கு கற்றோரும் கல்லாதாரும் போற்றக்கூடிய செந்தமிழ் நடையில் கவிதைத் தொகுதி ஒன்றினைத் தமிழ் கூறு நல்லுலகத்திற்கு அளித்துள்ளார், ஆசிரியர் என்றால் அது வாழ்த்துரையாகுமன்றி வெறும் புகழுரையாகாதெனக் கருதி ஆசிரியரின் தமிழ்த் தொண்டு மேலுஞ் சிறக்க நல்லாசி கூறித் தந்துரையை எழுதலாயிற்று.

F. X. C. நடராசா

அரசகரும மொழித்துறை,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைத் தமிழ்

## இயற்கை

அஞ்சலி
பொழுது புலர்ந்தது.........!
சிட்டு
மழை
சாலை
குயிலே கூவாய்!
எழிலுடையாள்!
ஆல்
ஆறு
மயில்

## வாழ்வு

இசை அரங்கு
எம்தலை முறையில்........
இளமைப் பருவம்
சிந்தனைக்கு
நீ வாழி!
பாடுதம்பி பாடு!
தாயகம்
எழுந்திடு!
திருக்குறள்
என்னகும்?
பொங்கல்
சில பண்பு
ஒரு பாரதி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணாடி
காந்தி
உன்னில் நின்று.........!
தீபாவளி
உண்மை விளக்கு
மகாவலியாள்!
வாழ்க்கை நெறி

## வாழ்த்து

வாழ்த்து
கடவுள் நல்லவர்
இறைவா!
குரலொலி கேட்கின்றேன்!
இறைவன் சாயலர்
அழகு
முதலோனே!
கண்டேன்!
வாராய் இறைவா!
உணர்வில் இறைவன்.........!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை

எத்தனைகோடி இன்பம் வைத்தாய்!—எங்கள்
இறைவா! இறைவா! இறைவா!

சித்தினை அசித்துடன் இணைத்தாய் —அங்கு
சேரும் ஐம்பூதத்து வியனுல கமைத்தாய்

அத்தனை யுலகமும் வர்ணக் களஞ்சிய
மாகப் பலபலநல் லழகுகள் சமைத்தாய்!

.....................................................................

—பாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி

காலை உயிர்ப்பின் உணர்வூட்டும்
கானப் புட்கள் இசை வெள்ளம்;
சோலைச் சுரும்பின் சுருதி யெல்லாய்
தொர்டர்ந் தெழுந் தஞ்சலி செய்திடுக.

தேடும் இனிய நாத ஒலி
திரண்டு எழுந்து தேன் புதைந்து
பாடும் புதிய பாடலுடன்
உன் பாதம் அஞ்சலி செய்திடுக.

பொங்கும் உதய ஒளி நீரில்
பூத்த மலராய் உலகொளிர
அங்கு விழிக்கும் எழில்கோடி!
அனைத்தும் அஞ்சலி செய்திடுக.

சுடரின் ஒளியிற் பளபளத்துத்
துடித்துத் தொங்கும் பனித்துளியின்
இடையே விரியும் புதுமலர்காள்!
ஏற்றி அஞ்சலி செய்திடுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகும் ஒளியும் விளையாடும்
அந்திக்காலப் பூந் தென்றல்
அழகார் உந்தன் பதம் தோய்ந்து
அசைந்து அஞ்சலி செய்திடுக

கோலம் சிந்தும் குவிவானம்
கொஞ்சிச் சிரித்து விளையாடும்
நீலக்கடல் தன் அலைக்கரத்தை
நீட்டி அஞ்சலி செய்திடுக.

வண்ண நிலவின் அமுத ஒளி
வரவால் வையம் களிதுளும்ப;
எண்ணச் சிலிர்ப்பில் இழையோடும்
இறையை அஞ்சலி செய்திடுக.

இந்த விந்தை செறி உலகை
இயக்கி அதனுள் நின்றுலவும்
அந்தமில்லாப் பரம் பொருளை
அண்டி அஞ்சலி செய்திடுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொழுது புலர்ந்தது........!

பொழுது புலர்ந்தது
புட்கள் எழுந்தன
புவி யெங்கும் ஏழிசை இன்ப ஒலி!
அழகு மலர்ந்தது
இனிமை பிறந்தது
ஆலய மணிகள் ஆர்த்தனவே!

பொழுது புலர்ந்தது
புது நாள் விடிந்தது
பூத்த துலகுயிர்த் தத்துவமாய்!
அழகு சிலிர்த்தது
ஆதவன் பொற் கதிர்
ஆயிரம் விந்தை புரியுதுபார்!

மலர்கள் விரிந்தன
வாசம் கமழ்ந்தது
மாந்தர்கள் புத்துணர்வோ டெழுந்தார்!
செயல்கள் தொடர்ந்தனர்
சிந்தை தெளிந்தது
செங்கதிர் தங்கம் சொரிந்ததுவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிர்கள் நிமிர்ந்தன
வயலில் உழவர்கள்
பாடும் உழவுப் பண் ஓசை தனி!
அயலிலே தோப்புக்கள்
அங்கிசைப் பூங்குயில்
அற்புதக் கானம் பொழிந்ததுவே!

பூத்தன தாமரை
புட்கள் நீராடின
பொய்கை யெல்லாம் புதுமை எழில்!
ஆர்த்தன தேன் வண்டு
அசைந்த இளம் தென்றல்
ஆடின பூங்கொத் தழகவிழ்ந்தே!

பொங்கும் எழிலைப்
புதுக்குடத் தேந்தியோ
போகின்றார் இளம் பூவையர்கள்!
எங்கும் விழிப்பு
இயற்கை உயிர்ப்பு
இளங்கதிர்ச் சோதி நிறைந்ததடா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிட்டு

பூங்கொடியில் சிட்டிருந்து
ஊஞ்சல் ஆடுது — காலைப்
புது ஒளியில் அதன் வடிவு
பொன் சொரியுது.

பனி மலரின் இதழ் ஒதுக்கிப்
பறந்துலாவுது — அதன்
பட்டு உடல் உள்ளந் தன்னைத்
தொட்டு மீளுது.

முல்லைக் காம்பு அடியெடுத்து
மெல்லத் தாவுது — தளிர்
மேலிருந்து விழி உருட்டிச்
சேதி சொல்லுது.

சின்னஞ் சிறிய இறகு தூக்கித்
தென்றல் ஆடுது — பின்
தேன் மலரின் நெஞ்சத்திலே
கண் ணயருது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல் நுனியின் பனித்துளியைப்
போய்ச் சுவைக்குது — அதில்
புகுந்து ஆடித் தோய்ந்தெழுந்து
சிறகுலர்த்துது.

அங்கு மிங்கும் தலையசைத்து
நெஞ்சை நிமிர்த்துது — எதற்கும்
'அஞ்சேன்' என்று பிஞ்சுமொழியில்
ஆர்ப் பரிக்குது.

சொந்தம் இந்தப் பூமியென்று
துள்ளி ஆடுது — எங்கும்
சுதந்திரமாய்ப் பறந்துலகைச்
சுற்றிப் பார்க்குது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை

கன்னங் கருமேகம் கட்டிக் கவிந்திடக்
காற்றெழுந்தாடியே தோப்பை உலைக்குது
மின்னல் சொடுக்கினில் விண்ணே துடிக்குது
வேகமாய் அலை வீசிப் புரளுது.

எங்கும் மழை மூட்டம்!
இயற்கையின் ஆர்ப்பாட்டம்!

எங்கும் இடியின் எதிரொலி தாவுது
ஏங்கும் பசுங்கன்றோ வெருண்டோடுது,
தங்குமிடந்தேடிப் புட்கள் சரிந்திடச்
சருகுகள் காற்றில் எழுந்தெழுந்தாடிட........

எங்கும் மழை மூட்டம்!
இயற்கையின் ஆர்ப்பாட்டம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓங்கி வளர்ந்த மரக்கிளை சாயுது
ஒன்ருேடு ஒன்ருகத் தென்னைகள் மோதிடப்
பூந்தளிர், பிஞ்சு மலரிதழ் பிய்ந்து,
பிய்ந்து சிதறிப் பறக்குது வீச்சினில்!

எங்கும் மழை மூட்டம்!
இயற்கையின் ஆர்ப்பாட்டம்!

மேகங் கிழித்துப் பெருமழை கொட்டுது
மேனியில் நீர் தோயப் பூமி சிலிர்க்குது
தாவிப் பரந்து புதுப் புனல் பாயுது
தண்ணீரில் ஆடிப் பயிர்க்கால் நிமிருது

புதிய புனல் ஓட்டம்!
புதுப் பசுமை ஈட்டம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாலை

எட்டிய தூரம் வரை
இணைந் திணைந்து சென்று
பட்டினம் சிற்றூர்க் குறவுப்
பாலமாய் அமையும் சாலை.

தப்பாது வழியைக் காட்டித்
தமர் பிறர் எனப்பாராது
எப்போதும் எவ்விடத்தும்
எல்லோர்க்கும் உதவும் சாலை.

நிலமகள் வகிடு போல
நீண்டிடும், சில இடத்தே
குலமகள் நாணத் தோடு
குலவியே நெளியும் சாலை.

வந்திடும் வழிப் போக்கர்கள்
யாவரும் அயர்வு நீங்கித்
தங்கியே ஏக ஏற்ற
தண்நிழல் அளிக்கும் சாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிடர் வருவார், போவார்
மாற்றங்கள் வந்து மீளும்,
தானெல்லாம் அறிந்திருந்தும்
தன்பணி செய்து கிடக்கும் சாலை.

வாழ்க்கை ஓர் பயணம் என்று
வகுத்ததை எடுத்துக் கூறி
வாழ்க்கையில் வழியதாகி
வருமிடர் தவிர்க்கும் சாலை.

எத்தனையோ உயிர்கள்
இளையவர் முதியோராக,
அத்தனை உயிர்களுக்கும்
அவர் வழி காட்டும்சாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குயிலே கூவாய்!

கொந்தார் சோலை உட்புகுந்து
குலவும் குயிலே உன் குரலின்
சிந்தா இனிமை நயம் திரண்டு
செறிந்து பரவக் கூவாயே!

குழலின் இனிமை யாழினிமை
கொஞ்சும் மழலைசிந் தினிமை
அழகுத் தமிழின் இனிமையெலாம்
அள்ளி எடுத்துக் கூவாயே!

தேனை அமுதைச் சொரிந்திசையில்
சிந்தை கிறங்கச் செய்குயிலே
கானப் புட்கள் கீத மெல்லாம்
கடந்து இனிக்கக் கூவாயே!

மானும் புலியும் இன்னிசையில்
மயங்கி மறுகி அருகணையத்
தேனின் மலர்கள் இதழ் அவிழ்க்கச்
சிந்தை கனியக் கூவாயே!

UNIVERSITY OF CEYLON LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேமாங் கனியின் சுவையினிலும்
தென்றல் மீட்டும் இசையினிலும்
பூமாண் நறுந்தேன் பொய்கையிலும்
புகுந்து எழுந்து கூவாயே!

வசந்த மென்னும் புதுப் பருவ
மங்கை எழிலாள் வரவு கண்டு
இசைந்து புதிய குரல் எடுத்து
இனிமை பாயக் கூவாயே!

அயரா முயற்சி முழு உழைப்பை
அளித்துப் பொதுமை நலன் பேணும்
செயலார், நாட்டின் திருவனையார்
சிறந்து மகிழக் கூவாயே!

பூத்துக் குலுங்கும் பசுஞ் சோலை
புதிய வளம் சாய் கழனியெலாம்
ஆக்கி நிமிரும் திறலோர்கள்
அகத்து இருந்து கூவாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழிலுடையாள்!

தேனும் மலரும் நிலவும் இணைந்தொன்று
சேர்ந்த நலமுடையாள்! — கோடிமலர்
பூத்த எழிலுடையாள்!
வானின் வடிவினில் தோய்ந்தெழுந்தாள்! இந்த
வையத்தின் மங்கை அவள்! — அழகுத்
தெய்வத்தின் பிம்பமவள்!

கொத்தாய் மலர்ந்திடும் புத்தம் புது எழில்
கொட்டிச் சிரித்திடுவாள்! — உணர்வில்
முட்டி நடமிடுவாள்!
சித்தங் குளிர அருகணைந்து இளம்
தென்றற் சுகமளிப்பாள்! — நெஞ்சில்
நின்று இதமளிப்பாள்!

கார் தோன்ற ஆடிக் களிக்கும் கலாபமாய்க்
கண் முன்னே ஆடுகிறாள்! — புதுப்
பண்மீட்டிப் பாடுகிறாள்!
பார் பூத்த சித்திரைப் பைங்கொடியாள் இவள்
பாவின் உயிர்ச்சுவையோ! — அல்லாற்
பாவை எழிற் குவையோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூக்குடைந் தாடிடும் புள்ளினமோ! மலர்ப்
பொய்கையோ! பூவன்னமோ! — இவள்
செய்கைகள் எவ்வகையோ!
தீக்கொழுந்தாம் அந்திச் செம்பொன் குழம்பள்ளித்
தெளித்து மகிழுகிறாள்! — அதில்
குளித்து நிமிருகிறாள்!

எத்தனை எத்தனை வண்ணச் சிதறல்கள்!
எங்கும் எழில் வீச்சுக்கள்! — பசுந்
தங்க ஒளித் தூற்றல்கள்!
புத்தம் புதிய இளங்கதிர் தீண்டிடப்
பூக்கும் எழில் உயிர்ப்போ! — இவள்
புதுமை உயிர்த்துடிப்போ!

மொத்த அழகின் உரிமையினாள் அதை
மூடித் திறந்து வைப்பாள்! — விழிகள்
தேடிச் சுழல வைப்பாள்!
எத்தனை ஆயிரம் பொற்குவையும் விஞ்சும்
இயற்கையின் செல்வம் இவள்! — இறைவன்
எண்ணத்தின் வண்ணம் இவள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆல்

ஒளி செய்யும் வெம்மை யாவும்
உன் மேலில் தாங்கி இனிய
குளிர் பெய்யும் ஆலே! உந்தன்
குணத்திலும் குளிர்மை உண்டு.

உயர் குண மாந்தர் மக்கட்
குதவிடும் தன்மை போல
அயர் வினை நீக்கிச் சுகம்
அண்டினுர்க் களிக்கும் ஆலே!

ஆல் பழுத்திட்ட காலை
ஆர்த்தெழும் பறவைக் கூட்டம்
தேர் விழாக் கூட்டமென்னத்
திருவிழாக் காட்சி பூக்கும்!

கூடிடும் பறவைக் குலம்
கும்மாளம் அடித்து வாழும்,
ஏறிடும் அணிற்பிள்ளை மென்
இலைகளிற் புரண்டு வீழும்.

275528

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுதுகள் விட்டு நிழல்
விரித்திடும் கிளையில், காலைக்
கதிர் நீண்டு தங்கம் தோய்க்கும்
காட்சியோ நெஞ்சை அள்ளும்!

களித்தாடும் சிறுவருக்கும்
கதைபேசிக் குலவுவோர்க்கும்
வழிப்போக்கர் எனப் பலர்க்கும்,
வாய்ந்த நற் குளிர்மைப் பந்தல்!

அடிமரச் சுமையை ஏற்க
அதன் விழுதணைந்து நிற்கும்
குடி ஓம்பும் பண்பிதென்றே
கூறிடச் சிறக்கும் ஆலே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறு

மஞ்சாடும் மலையிருந்து
வானமுதாய்க் கீழிறங்கி
விஞ்சும் புதுநீர் உருட்டி
மிதந்து வரும் ஆற்றைப்பார்!

நாணமுடன் உடல் வளைத்து
நடைபயின்று பின் தவழ்ந்து
பூணுமெழில் பூண்டு புரள்
பூம்புனல்பார்! எழிலோட்டம்!

பாயும் நீர்க் கிளுகிளுப்பில்
பயிரினங்கள் மதர்த்து எழத்
தோயும் இசைப் புள் ஆர்ப்பத்
தொடருதுபார் கடல் நோக்கி!

கனித்தோப்பு, பூஞ்சோலை
கழனி, பயிர் பசுமைநிலம்
இனித்தோங்கி வளஞ்சீர்க்க
எழில் நடையோ டேகுதுபார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமணக்கப் புனல் மணக்கப்
புதியவளம் பொன்கொழிக்க;
பாமணக்கப் பயன் சிறக்கப்
பாயுதுபார்! பண் இசைத்து!

பூ மகளின் உளம் சிலிர்க்கப்
புதுப் பசுமைப் புரட்சியுடன்
"வா மகளே!" என அழைக்க
வந்ததுதான் வள நதியோ!

வயல் செழித்து வளம் செழிக்க
வகை வகையாய்த் தொழில்பெருக
அயலில் உள்ள இடமனைத்தும்
அழகூட்டிப் பாயுதுபார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மயில்

மேகம் குளிர் சிந்தத்
தோகை எழில் முந்தக்
கோல நடமிடும் மஞ்ஞையே! — உந்தன்
கூத்தின் சிறப்பிங்கு விந்தையே!

தென்றல் இசை மீட்டத்
தீங்குயில் தேன் பெய்ய
நின்று அடிதூக்கி ஆடுவாய்! — என்றும்
நெஞ்சத்தில் ஆடிடும் மஞ்ஞையே!

வானத் தொளிர் நீலம்
வையத் தெழில் வண்ணம்
மேனியில் போர்க்குங் கலாபமே — நடன
வித்தைக்கோ இவ்வணி ஒப்பனை!

தென்றல் நெளிவினும்
தேன் செண்டசைவினும்
குன்றின் அருவிக் குதிப்பினும் — தோய்ந்து
குதித்து எழுந் தசைந் தாடுவாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருங்கலை வல்லியர்
அழகிள நங்கையர்
ஆர்க்கும் சதங்கை அலம்பிட — ஆடும்
அற்புதம் கண்டு வியப்பாயோ!

இயற்கையின் நாட்டியம்
எழில் பெறக் காட்டியே
எங்கும் நீ ஆடிக் களிக்கின்றாய்! — கலை
எழில் முத்திரை மிளிர்ந்து சொக்குதே!

தத்திம் ததிம் எனத்
தாள லயத் தோடு
தாவி நடமாடும் மஞ்ஞையே! — பாரில்
ஆடும் கலை யாரின் சொந்தமோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வு

மனதி லுறுதி வேண்டும்
வாக்கினி லேயினிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
..........................................................

கண் திறந்திட வேண்டும்
காரியத்தி லுறுதி வேண்டும்
..........................................................

மண் பயனுற வேண்டும்
வானகமிங்கு தென்பட வேண்டும்
..........................................................

—பாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசை அரங்கு

எல்லோரும்: வாருங்கள் தோழர்காள்!
வந் தெம்முடன் கூடிப்
பாடுங்கள் பாட்டைப்
பண்ணேடிணைந்து நின்றே!

முரளி: தென்றல் அருகணைந்து
தெம்மாங்கு பாடட்டும்
குன்றின் அருவி துள்ளிக்
குதித்து தத்தீம் போடட்டும்!

பாஸ்கரன்: வண்ணப் பறவை யினம்
வந்தமர்ந் துதவட்டும்;
சின்னஞ் சிறியர் இசை
திக் கெல்லாம் பரவிடட்டும்!

ஆதி: மீட்டுங்கள் வீணை
மிருதங்கம் ஒலிக்கட்டும்
கூட்டுங்கள் தாளம்
குரல் இனிமை சொட்டட்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாதரன்: நாளை உலகு நம்முலகு
உண்மை இதே!
சோலைச் சுரும்பினமாய்ச்
சுதி கூட்டிப் பாடிநிற்போம்!

எல்லோரும்: புதிதாய் மலர்ந் தோம்
பொற்காலப் புத்திரர் நாம்
பூக்கும் உலகின்
புதிய ஒளி நாமாவோம்

உள்ளத்தில் தூய்மை; எம்
உறவுகள் தனிச் சிறப்பு;
கள்ளமில்லா வாழ்க்கை
கடவுளரின் சாயலர் நாம்.

பேதமில்லா எம் முலகு
பீடுடைத் தனியுலகு
சாவதில்லை நீதி, என்றும்
சாந்தியுண்டு இன்பமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோம்பித் திரிந்தலையோம்,
சுயநலத்தைப் பேணேம்
ஏங்கிப் பிறர் வருந்த
எச் செயலும் எண்ணேமே.

உயர்வோம் அறிவியலில்
ஒழுக்கத்தில் முன்னிற்போம்
அயரோம் சிறிதும்
ஆனவரை நலன்புரிவோம்

கூடிக் குலாவிக்
கொடுத்துண்டு நாம் மகிழ்வோம்,
தேடித் துயர் துடைப்போம்
தெய்வக் குணமுடை யோம்.

இதயத்தால் ஒன்றியர் நாம்,
இவ்வுலகின் செல்வங்கள்,
இதயக் குரல் இணைய
இன்னிசையை மீட்டிடுவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம்தலை முறையில்.........

ஆலய மணிகள் ஒலிக்கட்டும்
அன்பர்கள் இதயம் மலரட்டும்
வாயில்கள் தோறும் மகிழ்வோங்கி
மங்கல வாழ்த்துப் பரவட்டும்.

வற்ருு வளங்கள் சுரக்கட்டும்
வளமாய் நாடு சிறக்கட்டும்
கற்ருர் தொகையாய்ப் பெருகட்டும்
கலைகள் சிறந்து ஒளிரட்டும்.

தேமாங் குயில் இசை பாடட்டும்
தென்றல் இன்சுகம் ஈயட்டும்
பூமாண் பொழில்கள் வாவியெலாம்
புதுமை அழகு மிளிரட்டும்.

ஆக்க வழிகள் திறக்கட்டும்
ஆயிரம் தொழில்கள் வளரட்டும்
தூக்க நிலை விரைந்தோடட்டும்
சுதந்திர உணர்வு பாயட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதத் தன்மைகள் மலரட்டும்
மங்கல வாழ்வு சிறக்கட்டும்
புனிதக் குணங்கள் பொலியட்டும்
பூமியே புதுயுக மாகட்டும்.

அன்பால் இதயங்கள் விரியட்டும்
அனைவரும் தோழமை பூணட்டும்
இன்பநிலை இங் கெய்தட்டும்
எந்நிலை முறையிலி தாகட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளமைப் பருவம்

இளமைப் பருவம்
எமது பெரும் செல்வமடா!
வளம் நிறையும் வாழ்வில்
வாய்ந்த பொற் காலமடா!

உள்ளத் துணிவும்
உயர்ந்த பல நோக்குகளும்
அள்ளி அள்ளி ஈயும்
அழகுப் பருவமடா!

ஆக்கத் திறன் அறிவு
அரிய பண்பு வீரமிவை
பூத்து ஒளிரும்
புதுப் பருவம் இளமையடா!

எண்ணங்கள் நூறு;
இதயத் துடிப்புடனே
பின்னிப் பிணைந்து
பேசும் பருவமடா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடிப்பும் சுறுசுறுப்பும்
துள்ளும் உணர்வுகளும்
வெடித்து வெளித் தோன்றி
விளையாடும் பருவமடா!

மொட்டினுள் அழகாய்
மூடிய கனவு எல்லாம்
கட்டவிழ்ந்து மெல்லக்
கதிக்கும் பருவமடா!

துன்பம் கவலை எல்லாம்
தூக்கி எறிந்து விட்டு
இன்புற்று ஆடும்
இளமைப் பருவமடா!

மகிழ்ச்சி நிறை எதிர்கால
வாழ்விற் கொளி யூட்டும்
எழுச்சி நிறைந்த
இனிய பருவமடா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்தனைக்கு

வண்ணத்தின் சேர்க்கைதான்
வானவில் உண்மையோ?
மனதில் தெளிவுடன் வாழ்ந்துவிடு!
எண்ணங்களாயினும்
எவர் கூறிப் போயினும்
எப் பொருளாயினும் மெய்ப்பொருள் காண்!

ஆழ்கடல் முத்தும்
அம்பொன், மணியும்
அமைந்து ஒளிரும் முத்தாரமதாய்!
வாழும் உலகத்து
மாந்தர் இணைந்திடின்
வையமும் சாந்தியில் தோய்ந்தொளிரும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மனத்துக்கண் மாசிலன்
ஆதல்; அனைத்தறன்''
வழங்கும் அமுதக் குறட்கருத்தாம்!
பணத்தின் உதவிகள்
பணிகளையும் விட
மனப் பக்குவத் தறமே மிக்கதுவாம்!

உண்மை ஒளிகாட்டும்
ஒழுக்கம் புகழ் சேர்க்கும்
உழைப்பு வெற்றியை ஈந்துயர்த்தும்!
நன்மைகள் கூட்டும்
நலிவுகள் நீக்கும்
'நான்' எனும் அகந்தை அன்பில் அழியும்!

காலம் தரியாது
கடந்தாலும் மீளாது
காலத் தருமை கருத்திற் கொள்ளு;
ஞாலத் துடிப்புணர்ந்து
நற்பணி ஆற்றிடு
நன்மைக் குணத்தால் உள்ளம் நிரப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீ வாழி!

அன்னைத் தமிழே! அழகுப் புதுநிலவே!
கன்னற் சுவையே! காவியமே! நீவாழி!

என்றும் இளமை, இனிமை எழில் தோய்ந்து
நின்று சுடரும் நித்திலமே! நீவாழி!

முன்னைப் பழம் பொருளே! மூத்தமொழித்தாயே!
இன்னும் புதுமை நலன் ஈபவளே! நீவாழி!

உள்ளச் சிறப்பே! ஓங்கும் கலை உணர்வே!
அள்ளி இன்பம் சொரியும் ஆரமுதே நீவாழி!

உலகப் பொது நெறியே! உயர்ந்தமனப் பண்பே!
புலமை சிறந்தொளிர் பொலங்கொடியே! நீவாழி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மைப் பொருளே! தெளிவே! அறிவே!
அம்ம! ஆவி அனையவளே! நீவாழி!

ஆன்ற நூற் பெரும் பரப்பே! அகம் புறமாம் வாழ்வே!
தோன்றிப் புகழ் தோயும் தூயவளே! நீவாழி!

அன்பாய் அழகாய், அமுதாய், இனிமையதாய்!
இன்ப இயல் இசை கூத்தென நிமிர்ந்தோய்! நீவாழி!

வைதாரும் வாழ வாழ்த்தும் குணமுடையாய்!
உய்யும் வழியீந்து ஓம்பும் தாய்! நீ வாழி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடு தம்பி பாடு!

பாடு தம்பி பாடு — உலகப்
பாட்டாய் ஒன்று பாடு.

நீதி கேட்கும் உலக மாந்தர்
நிலையுயரப் பாடு — அவர்
தலை நிமிரப் பாடு.

உயர்ந்த மனிதப் பண்பு யாவும்
உலகளாவப் பாடு — அவை
ஓங்கி வளரப்பாடு.

பிறப்பால் ஒன்றும் மனிதகுலப்
பிளவு நீங்கப் பாடு — அவர்
பேதம் அறப்பாடு.

சிறந்த மனிதச் சக்தியாவும்
திரண்டு இணையப்பாடு — உலகு
செம்மையுறப் பாடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சி அஞ்சி வாழும் மக்கள்
அச்சம் நீங்கப் பாடு — அவர்
ஆண்மை ஓங்கப் பாடு.

மனித குலத்தை மனிதர் மாய்க்கும்
மடமை இகழ்ந்து பாடு — மக்கள்
மதி தெளியப் பாடு.

அறிவின் திறனும் உணர்வின் வலிவும்
அலையாய் மோதப் பாடு — பாட்டின்
அருமை சிறக்கப் பாடு.

புதிய வாழ்வு மலர உலகிற்
பொதுமை பூக்கப் பாடு — வாழ்வின்
பொருளை உணர்த்திப் பாடு.

வாழத்துடிக்கும் மாந்தர்க் கேற்ற
வழி சிறக்கப் பாடு — புது
வழி திறக்கப் பாடு.

இரக்க மில்லார் பிறர்க் குதவார்
இதயம் திறக்கப்பாடு — அன்பின்
இதம் உணரப் பாடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகம்

ஈழம் எங்கள் தாயகம்
எழில் நிறைந்த வாழ்வகம்
சூழும் இந்து வாரிதி
தோய்ந் தொளிரும் தீவகம்!

வான் உயர்ந்த மலைகளும்
வளைந்து ஓடும் நதிகளும்
தேன் மலர்ப் பூஞ் சோலையும்
சிறந்து வளம் செய் எழிலகம்!

அன்பும் அறமும் மலர்ந்திடும்
அருங்கலைகள் ஒளிர்ந்திடும்
இன்ப நலன் சிறந்திடும்
எவர் மனமும் கவர்ந்திடும்.

ஆன்ற விந்தடங்கிய
அறிஞர் பெரியோர் ஞானியர்
தோன்றலாற் புகழ் மண்டும்
தொன்மையான பொன்னகம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தும் இயற்கை வளத்தினுல்
சீர்த்த அழகுத் திறத்தினுல்
வந்து கூடும் உலகினேர்
மகிழ்ந்து போற்றும் தாயகம்!

வரலாற்றுப் பெரும் புகழ்;
வளம் தரும் பொருட்சுவை;
அயராதுழைக்கும் மாந்தர்கள் இணைந்
அருமை கொழிக்கும் தாயகம்!

மெய்மைத் தொண்டும் வீரமும்
வெற்றி வாழ்வும் சீலமும்
தெய்வப் பண்பும் கூடியே
தேசுலாவும் தாயகம்!

மதங்களுக்குள்ளே ஓர்மை,
மக்கள் நெஞ்சத் தன்புலா,
இனங்களுக்குள் ஐக்கியம்,
இனிய ஒற்றுமை வாழ்வகம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுந்திடு!

பெற்ற தாயும் பிறந்தநாடும்
பெருமை கொள்ள எழுந்திடு
கற்ற பண்பை மற்றையோர்க்கும்
காட்டி அன்பாய் வாழ்ந்திடு!

நீதி நேர்மை வழியை நோக்கி
நிமிர்ந்த நெஞ்சோ டெழுந்திடு
தீ தகற்றி உண்மை காக்கும்
திற லோனக விளங்கிடு!

இருள் கவிந்த உள்ளந் தோறும்
இளஞ் சுடராய், எழுந்திடு
தளை அறுத்து உரிமை காக்கும்
சக்தியாக மாறிடு!

மெய்மை அறிவு வீரப் பண்பின்
விளக்கமாக எழுந்திடு
உய்ய உலகம் மனமுவந்து
உனது பங்கை ஈந்திடு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மை கனிந்த இதயம், கருணைச்
சிலிர்ப்பிேைனாடு எழுந்திடு
இம்மை வாழ்வின் பயன் சிறக்க
ஏற்ற தொண்டை ஆற்றிடு!

இளமை மலர்ச்சி இதய உணர்வின்
எழுச்சியாக எழுந்திடு
உள முவந்து மக்கள் போற்றும்
உத்தமனாய் ஓங்கிடு!

நலம் படைத்த நன்மையாவும்
நாட்டில் ஓங்க எழுந்திடு
உரம் படைத்த சிந்தையோடு
உழைத்து முயன்று உயர்ந்திடு.!

ஆழித் துன்பச் சுழியின் வீச்சில்
அமிழ்ந்திடாது எழுந்திடு
'வாழி' என்று உலகம் வாழ்த்த
வல்லவனாய் வாழ்ந்திடு!

விடிவு காட்டும் தாரகையாய்
விழிப்புணர்த்தி எழுந்திடு!
மடிதலற்ற திறத்தினோடும்
மானத்தோடும் வாழ்ந்திடு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்குறள்

சீர்த்த கருத்தனைத்தும்
தீந் தமிழின் சுவை பெய்து
வார்த்துக் குறள் வடிவில்
வழங்கினன் வள்ளுவனோன்!

தெய்வத் தமிழ் மறையாய்த்
தெவிட்டாப் புதுச் சுவையாய்
வையத்து மாந்தருக்கு
வாழ்வின் பொருள் கூறும்.

உலகப் பொது நிதியாய்
உயர்ந்து உலகளந்து
உலகப் பொதுமை நல்கி
ஒப்புரவாம் பொற்புறு நூல்!

இருமைப் பயனளாவி
ஏற்ற நெறிகாட்டும்
அருமைக் கருவூலம்!
ஆன்ற பண்பின் ஓங்கு நிலை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தை சிறந் தொளிரச்
செம்மை யறம் மலரும்
எந்த யுகம் வரினும்
இனிக்கும் புதுக் கருத்து!

உள்ளத் தொளியும்
உயர்ந்த விழுப் பொருளும்
அள்ள அள்ளக் குறையா
அமுத சுரபியாகும்!

வேத நூல் என்போம்
விளங்கு மெய்யறம் என்போம்
பேத மற்ற நீதி நெறி
பெருவாழ் வென்போம் குறளை!

மனிதக் குணம் சிறக்க
வாழும் வழி கூறிப்
புனித நிலைக் குயர்த்தும்
பொய்யா மொழியாகும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்ஞகும்?

மூடா இதயங்கள் ஆலயமாகும்
மூடும் இதயங்கள் என்ஞகும்?

பண்பெனும் ஆடை அணியாகும்; இல்லாற்
பாரின் நாகரிகம் என்ஞகும்?

பிறப்பின் தத்துவம் ஒன்ருகும்
பின்னப் பலவீனம் என்ஞகும்?

எளிமை என்றும் இதமாகும்
ஏந்தும் புதுமோடி என்ஞகும்?

அன்பால் உலகே கனிவாகும்
அதிகார வேட்கைகள் என்ஞகும்?

உழைப்பே மனித உயர்வாகும்
உண்டுறங்கும் சுகம் என்ஞகும்?

உண்மை என்ப தொளியாகும்
உலகின் கயமை இருள் என்ஞகும்?

செயற் திறனே திறஞகும்; அன்றிச்
செய்யும் பணிகள்தான் என்ஞகும்?

பிறப்பே பெரும் பேருகும்
பிழைபட நோவது என்ஞகும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல்

காலைப் பொற்கதிர்க் கோலச் சிதறலால்
கலை வடிவாய் இவ்வையம் மலர்ந்தது!
சோலை, வாவி வயல் மனை தோப் பெங்கும்
சோதிப் பொங்கல்! சுடரின் ஒளிப் பொங்கல்!

எங்கும் இன்பம் இதமாய் எழுந்தது!
இனிய பொங்கல் கனிவு குழைந்தது!
மங்களங்கள் நிறைந்து பரவிட
மனைகள் தூக்கும் அணியில் சிறந்தன!

மாங்கனி வாழை தேன்கரும்பினோடு
மஞ்சள் இஞ்சிப் புதுமணம் சேரவும்
ஆங்கு கன்னியர் கைவளை ஆர்க்கவும்
அழகுக் கோலம் விரிந்து கிடந்தது!

புத்தரிசிப் பசும்பால் உலை தாவிப்
போந் தெழுந்து அச்செந்தழல் சூழ்ந்திட
எத்திக்கும் மகிழ் வோசை ஒலி பாய
இனிதே பால் பொங்கி இன்பம் பொழிந்ததே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லையற்ற மகிழ்வை அதிர்வெடி
எடுத்து நீட்ட இதயம் களிதுள்ள;
சொல்குவியும் சுவை சிந்தப் பாவலர்
சுந்தரக் கவி தேனாய்ச் சிறந்தது!

கண்டும் தேமாங் கனிச் சுவை தொட்டும்
கரும்பும் சேர்த்துப் புதிதுண்டு ஆடியே
மண்டிருள் நீக்கி வையம் மலர்த்திடும்
வயங்கு ஞாயிறை வாழ்த் தொலி பாய்ந்தது!

வான் சிறந்து வளங்கள் நிறையவும்
வையத்தே மக்கள் மாண்பு துலங்கவும்
கோன் குடி நீதி அன்பு தழுவவும்
குலவு நலன்யாவும் பொங்கிப்பொலிந்ததோ!

ஏர் பிடித்து இனிமை விளைத்திடும்
ஏற்றம் மிக்க உழவர் உளம் பொங்க;
பார் சிறக்க உழைப்போர் திறன் பொங்கப்
பால் இனிமை திரண்டு சிறந்ததோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில பண்பு

சீறி எழும்பும் புயல் மழை பார்
சிறிய சிட்டின் துணிவைப்பார்!
வீறு நடையோ டுலவுதடா
வெற்றி வாழ்வு கூறுதடா!

வனத்தில் வாழும் மானினத்தில்
மானம் போற்றும் கவரியைப்பார்
இனத்தில் உயர்ந்து வாழுதடா!
ஏற்ற உவமை யாகுதடா!

பகுத்து உண்டு உறவாடும்
பண்பைக் காகம் காட்டுதடா!
வகுத்துக் கூற முடியாமல்
வாய் விட்டுரத்துக் கரையுதடா!

வண்ண மலர்களின் நறுந்தேனை
வகையாய்த் தேனீ சேர்க்குதடா!
எண்ண இனிக்கும் இதன் வழியும்
எதையோ நமக்குக் கூறுதடா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலுண் அன்னம் போற் கல்வி
பயிலும் முறைதான் நன்றென்று
நூலோர் கூறிப் போந்தார்கள்
நுண்ணறி வோம்பிக் கற்றிடடா!

ஐயறிவுயிரின் சில பண்பை
அறிந்திட இனிமை யூறுதடா!
செய்கையில் தெளிவு இல்லார்க்கு, இவை
சிறப்பாய் வாழ உதவுமடா!

UNIVERSITY OF CEYLON
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு பாரதி!

காலத் துடிப்புடன்
கனிந்திடும் புதிய தமிழ்க்
கவிதைக்கு ஒரு பாரதி!
ஞாலத்தே மொழி சிறந்து
புதிய வளம் தோய்ந்திலங்கு
நலனுக்கு அவனேர் தனி!

புதிய சுவை புதிய சொல்
பொருள் வளம் சொட்டிடும்
புதுமைத் தமிழ்க்கு அணி!
கவிதையால் புதுயுகம்
கண்டுலக கவியான
காலக் குரலின் ஒலி!

கவின் மிகும் கல் வைர
மணியாகும்; புல் ஒளிரும்
கவிச் சுவை மின்னேட்டமாம்!
புவிமாந்தர் வாழ்க்கையைப்
புதுநோக்கிற் கண்டிடப்
பொற்காலம் பூத்திலங்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழ குணர்வு வீச்சி ேேடு
அறிவுரிமை வீரம் ஒளிர்
அற்புதப் பொற்குவையாம்!
பழகு தமிழ் நடை மேவ
இனிய கலைப் பண்பிணையும்
பாரதியின் இன் கவிதைகள்!

மானிலம் ஒளி பெற்று
மேனிலை அடைந் தோங்க
வாய்ந்திட்ட புதிய படையல்!
ஆன் புது நெறி காட்டி
மானிடர் தளை அறுத்து
ஆர்த் தெழும் வீரமுரசு!

உள்ளார்ந்த ஆற்றல் மிகு
உயர்தனிச் செம்மையோடு
உலகமளாவி நின்ருன்!
அள்ளிக் கலை மெருகு
ஊட்டித் தமிழ் வரலா
றதனின் திருப்பமாஞன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊறிச் செறிந்திடும்
உலகப் பொதுமையின்
ஊட்டமாம் நம்பாரதி!
வீறிட்டெழுந்து மக்கள்
விடுதலைப் பண் தோயும்
வெற்றியின் புதிய நாதம்!

ஓராயிரம் தொழில்கள்
உலகில் வளர்ந்திட
உழைமின்! உயர்மின்! என்றான்!
பாவாயிரம் பாடி
உழைப்பின் திறன் கூறிப்
பல நலன் ஏற்றி வைத்தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணாடி

உள்ளதை உள்ளதாய்க் காட்டி எதையும்
உடனே திருத்தும் கண்ணாடி
எள்ளள வேனும் அழகு கலையின்
எடுத்துக் கூறும் கண்ணாடி.

முகத்தினைத் திருத்திக் கவர்ச்சியைப் புதுக்க
முன்னே நிற்கும் கண்ணாடி;
அகத்தின தழகு அங்கு விழிக்கின்
அதனைக் காட்டும் கண்ணாடி.

எடுத்த எடுப்பில் எக்குணங் குறையும்
இயம்பத் துணியும் கண்ணாடி,
அடுத்தது காட்டி மனதுடன் பேசி
அழகை வளர்க்கும் கண்ணாடி.

உள்ளெழும் ஆசைகள் உருவத்தில் ஏறினும்
உட்பொருள் உணர்த்தும் கண்ணாடி
எல்லார்க்கு மவர்மன இயல்பறிந்துதவி
இனிமை பயக்கும் கண்ணாடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீருடன் கோலங்கள் சிறந்து உலவத்
தினம் தினம் உதவும் கண்ணாடி;
பாரினிற் புதுப்புதுப் பாவனை அறிந்தும்
பண்புடன் நிற்கும் கண்ணாடி.

பருவத்தைக் காட்டி உருவத்தைக் காட்டிப்
பலகதை கூறும் கண்ணாடி;
கருமத்தே கண்ணாய், கதித்திடும் புதிய
காலத்துக் குதவும் கண்ணாடி.

எப்பொருள் எவ்வடிவாயினும் தன்னுள்
எளிதாய் அடக்கும் கண்ணாடி;
இப்புவி மாந்தர்க்கு எழில் வழிகாட்டி
எவரையு மணைக்கும் கண்ணாடி.

தனியெவர்க் கேனுமோர் சலுகையுமீயாத்
தன்மையாம், நேர்மைக் கண்ணாடி;
அனைவர்க்கும் பொதுவாய் அவர் நிலை விளக்கி
அரும் பணி யாற்றும் கண்ணாடி.

எதனையும் மறைத்து இதயத்துள் வையா
தெடுத்துக் காட்டும் கண்ணாடி;
வரு மொளி யாவும் வாங்கி அதனை
வழங்கி மகிழும் கண்ணாடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காந்தி

உலகம் போற்றுகின்ற — மகாத்மா
உத்தமன் காந்திமகான்!
நிலவும் சத்தியமாய் — உலகோர்
நெஞ்சத்து வாழுகின்றார்.

அன்பு அகிம்சையெனும் — அவரின்
அரிய தத்துவங்கள்
இன்ப ஒளி உமிழ்ந்து — உலகை
என்றும் நெறிப் படுத்தும்.

மனித உள்ளத்துடன் — ஏழை
மாந்தர் துயர் களைந்தார்
புனிதப் பண்புகளால் — இந்தப்
புவியை அழகு செய்தார்.

தூய்மை எளிமையதை — அணியெனத்
தேர்ந்து தெரிந்து கொண்டார்,
வாய்மை நெறியில் நின்று — உலகோர்
மனதைத் திறந்து விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிந்தனைகள் அடைந்தும் — தளரா
இலட்சியத் தோடுழைத்தார்
வந்தனைப் பண்புகளால் — உலக
மாந்தருள் தெய்வமானார்!

உத்தமன் காந்தியினால் — இந்த
உலகே உயர்ந்தது காண்!
சத்திய வேட்கையினால் — உலகின்
சரிதையே மாறியதே!

காந்தீயத் தத்துவமாய்ப் — புதுயுகம்
கதித்து மலர்ந்துவிடின்
சாந்தி பொழியும் அங்கே — மானிடர்
தன்மை துலங்கு மங்கே!

அன்பின் வலியுடனும் — தீரா
ஆத்ம பெலனுடனும்
என்றும் உலகு காண — சாதனை
ஈட்டி முதன்மையுற்றார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன்னில் நின்று.........!

வாழ்க்கை யதனில்
வருமிடரைப் புறங்காண்;
எதிர் நீச்ச லிட்டு
ஏகு, முன்நோக்கி;
முன் நோக்கித்
திரும்பின்
மோதும் இடர் யாவும்
பின் நோக்கக் காண்பாய்
பெரிதும் மகிழ்வடைவாய்!

உன்னில் நின்று நீ
உயர்ந்து சிறந்திடுவாய்!

வசந்தமாம் இனிமை
மாறி வரும் துன்பங்கள்
நிரைந்து எழுந்து
நெஞ்சத் துணர்ச்சியுடன்
பிணைந்து மிகுந்து
பேசுகின்ற உண்மைகள்;

ஒன்றுக்குள் ஆயிரமாம்
உள்ளங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று வியப்பீயும்
நீங்கா நினைவுபல:
வாழ்க்கைத் துறையில்
வருகின்ற சோதனைகள்
ஆக்கும் அனுபவங்கள்!
அவற்றின் புதுப்பாடம்
ஒவ்வொன்றாய் விரியும்!

உன்னையே நீ
அறிவாய்!

வாழ்க்கையை நோக்கின்
அது வழங்கும் பாடம் புதிது!

போராடி முன் நடப்போர்
புறங்கொடுப்போர்
சீராக வாழ்வோர்
திறனுடையோர்; தம்வாழ்வைப்
பாராமல் அஞ்சிப்
பறித் தழிப்போர்
எனப் பல பேர்!

வாழ்க்கையை நோக்கின்
அதுவழங்கும் பாடம் புதிது!
உன்னில் நின்று நீ
உயர்ந்து சிறந்திடுவாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீபாவளி

எங் கெங்கும் தீபம்
எழிலார் ஒளிவரிசை!
பொங்கும் மகிழ்வுப்
புது நாள்! ஒளித்திருநாள்!

தீபத் திருநாள்
திக்கும் வெடி அதிர்வு!
பாவம் ஒழியப்
பார் ஒளிபூக்கும் திருநாள்!

ஆடை புதிது
அணியும் முறை புதிது
பாடல் புதிது
பழகும் முறை புதிது!

உணவு வகை புதிது
உறவுகளும் புதிது
மன நிகழ்வு புதிது
மங்கல ஒளி புதிதாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறம் வென்ற தென்று
ஆர்த் தாடிப் பாடிச்
சிறந் தொன்று கூடும்
தீபாவளி நாள்!

துதிபாடி இறைவன்
துணை நாடி மீண்டும்
புதிதான வாழ்வில்
புகுந்தாடும் திருநாள்!

ஒளி பூத்து ஒளிர
உலகே மகிழக்
களி பூத்து அன்பு
கனிவாகும் திருநாள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மை விளக்கு.

உண்மை விளக்கு ஒளிர்கிறது; அதன்
ஒளியில் நாம் நடப்போம்.
நன்மைக் குரல் ஒன்று நெஞ்சில் ஒலிக்குது
நாம் அதனைக் கேட்போம்.

பாதை தெரிந்து வழியைப் பார்த்துப்
பயணம் தொடங்கிடுவோம்.
மாயைத் திரையினைக் கிழித்து உயர்ந்த
மனிதர்களா கிடுவோம்.

எதையும் தாங்கும் இதயத்துடனே
எழுந்து நிமிர்ந்திடுவோம்.
சிதையும் தருக்கினை ஒழித்து அன்பைச்
செயற் படுத்தி வாழ்வோம்.

சிந்தை செல்லும் வழியில் ஓடிச்
சென்றுழன்றிட மாட்டோம்;
விந்தை மயக்கில் வாழ்வை முடிக்கும்
விட்டிலாய் நா மா கோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்றைய வாழ்வின் படிப்பினை என்ன?
நினைவு தெளிந்திடட்டும்;
இன்றைய வாழ்வு நாளைய உலகுக்
கேற்றதாய் அமைந்திடட்டும்!

நீதி நேர்மை வழியில் நின்றால்
நெஞ்சத் தொளி பாயும்!
மீதி என்ன? எல்லாம் ஒளியில்
விளங்கிடும் வழி சிறக்கும்.

திருவிழாக் கூட்டத் தொருவனாய் வந்து
செல்வதாற் பயன் ஏது?
ஒரு சிறிதேனும் உள்ளத்தாற் சிறந்து
உலகினிற் குதவிடுவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாவலியாள்!

கவிதைக் குரல்:

பொன் கொழிக்க நாடு,
புனல் கொழித்து; மாந்தர்,
இன்னல் அழித்து வளம்
ஏற்றும் மகாவலியாள்!
பாய்கின்ருள்! நல்ல
பயன் ஊட்டிப் பண்புதைந்து;
தோய்கின்ருள்! பூமகளின்
தூய்மை எழில் சிறக்க;
காதலனும் இந்து மகா
கடல் அணையும் களிப்பினிலோ
போகும் வழி எல்லாம்
புதுமை புரட்டுகின்ருள்!

ஈழத்தின் செல்வமவள்!
எந் நதிக்கும் மேலவளாம்!
நீளும் இடமெங்கும்
நீட்டுகிருள் தன் இனிமை!
நெல்லுயர நீர் விரையும்
நிரைந் தெழும் பயிரினங்கள்,
எல்லையற்ற இன்பத்தால்
ஏழை மனமுங் குளிரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோலை வளங்கள், பழத்
தோப்புக்கள் செங்கரும்பு
ஆலைத் தொழில்கள்
அனைத்தும் சிறந்தோங்கும்!
துன்ப இருள் மாய்த்துத்
துலங்கும் மின்சக்தியினால்
இன்ப நிலவு பல
எங்கும் ஒளி பூக்கும்.
தொழில் வளங்கள் நூறு!
தோன்றும் புது நலன்கள்!
வாழ்வு சிறக்கும்.
வளம் சிறந்து நலமோங்கும்.

ஆடி எழும் ஓர் பால்
அழகார் இயற்கை எழில்!
பாடும் உழவுப் பண்
பரந்து திசை முட்டும்
பாடல் பெற்ற மாவலியாள்
பண்புக் குலக்கொடியாள்!
ஓடுகின்ற தீரத் தே
ஓராயிரம் நலன்கள்!

புதிய குரல்:

ஏடி! எழில் மாதே
இன்னும் நலன் சிறக்க
வாடி! வடபாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துன் புகழ் மணக்கத்
தாடி! இனிமை உன்
தாய்மை நிறைவடைய;

ஈழ வள நாட்டின்
இனிய புதுவாழ்வுக்காய்
ஆரத் தழுவும்
அலை கடலுக் கேகாது
வாழத் துடிக்கும்
மண் நோக்கித் திரும்பு!
பாடிப் பரவும்
பல நூறு இசை ஒலிக்கக்
கோடி வளங்கள் அள்ளிக்
கொட்டிச் சிறந்தாடு!
ஊக்கம் நிறைந்த
உழைப்பாளர் தோள் நிமிர்த்தி
ஆக்கம் படைக்க
அங்கும் புனல் சிந்து!

தீரா உன் இலட்சியத்தைத்
தியாகம் செய் மக்களுக்காய்!
சீர்பூத்த உன்பெருமை
மேலும் சிறந் தொளிரும்.
ஏர்பூத்து நாட்டின்
இனிமைச் சுகம் பூக்கும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்பூக்கும் பொதுமைப்
பண்பூத்து நிறைவெய்தும்
இல்லாமை இல்லை என்னும்
இன்ப நிலை சிறக்கும்!

நதியின் குரல்:

திட்டங்கள் கண்டெனது
திசையைத் திருப்புங்கள்
எட்டும் வரைக்கும்
எவர்க்கும் உதவிடுவேன்!
நாட்டின் நலமே
நலம்! எனத் துணிந்தேன்.
ஊட்டும் சிறப்பால் மக்கள்
உள்ளத்தே வாழ்ந்திடுவேன்!

மழைக் கருணையுடன்
வாழ உதவுகின்ற
குலக் குணமதனைக்
கொடுப்பதே என் வேட்கை!
வாழ் வுக்காய்க் காத்திருக்கும்
மண்ணுக்கே எனது நலன்!

நாடு செழிக்க
நல்வளங்கள் மேவ; மக்கள்
பீடு உயர்ந்து
பெறும் வாழ்வே என் அமைதி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய நிலம் தோய்ந்து
புனலாக என் பசுமை
பதியப் பயன் விரித்துப்
பாய்ந்து வளம் விதைப்பேன்!
என்னை அளித்து, அவ்
இனிமையிலே நான் சிறந்து
பொன்னைக் கொழித்துப்
புதுவாழ்வு ஏற்றிவைப்பேன்!

காலமெல்லாம் கூடிக்
களித்து கலந்தாடும்
நீலக் கடல் என்
நினைவால் வருந்திடினும்

மாருத அன்பை
வாய் விட்டுக் கூறி
ஏதேதோ சொல்லி
எழுப்பும் அலை ஓசை
காற்றில் கலந்து என்
காதல் நெஞ்சம் புகினும்

நேற்றும் அதற்கு முன்னும்
நிகழ்ந்த செயல் யாவும்
தோற்றி எனது முன்னே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பியலாய் ஆடிடினும்
கடமை பெரிதெனக்குக்
காதல் பெரிதல்ல.

போகின்றேன்! போகின்றேன்!
ஏதோ புதிய சக்தி
என்னை அழைக்கிறது
எந்தன் வழி புதிது!
இங்கே சுகம் புதிது!

கவிதைக் குரல்:

தலைப்பட்டாள் நங்கை!
தனது புது வழியே;
புறப்பட்டாள்! அங்கே
புதிதாய்ப் பிறந்தவளாய்!
தம்மை முழுதும்
தரணிக் களித்துலக்கும்
செம்மை அறமாந்தர்
தியாக உணர் வேந்தி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகுகின்றாள்! ஏகுகின்றாள்!
இலட்சியத்தே காலூன்றி
ஆவல் ததும்ப நிலம்
அணைத்து எழில் புரள,

எக்காலங் காண
இனிய வளம் திரண்டு
பொற்காலம் ஒன்று
பூத்துப் பொலிந்ததுவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கை நெறி

கவிச் சித்திரம்:

சிறீதரன்: ஒருமைப் பாடோ டுலகம்
ஓர் உலகமாக; மக்கட்
பெருமை சிறக்கப், பண்பு
பெருகி நலம் அளிக்க
நீதி ஒன்று ஆகி
நெறிகள் பொதுவாகி
ஆதி அன்பு சேர்த்து
அனைத் துயிரும் இன்பமுற;

வேதம் என நின்று
விளங்கும் குறள் ஈயும்
அன்பு நெறியதுவே
அகிலத்தின் முதல் நெறியாம்!

என்றும் அன்பு வாழ்வியலை
இனிதே நெறிப்படுத்தும்
கருத்தின் திறன் காண்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சசி: "அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு."

"அன்பின் வழியது உயிர்நிலை; அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு."

அன்புடைமை ஒன்றே
அகிலத்தின் உயிர்நிலையாம்!
போர் பகைகள் அழித்துப்
புனித வழி விரிக்கும்.
சீரழகு ஈந் துயிரைச்
செம்மை நிலைக்குயர்த்தும்
அன்பு; தெய்வப் பண்பு!
அனைத்துயிரின் பெருவாழ்வு!

சிவா: அறத்தின் புதிய பொருள்!
ஆம்! அதுவே மனத்தூய்மை!

"மனத்துக்கண் மாசிலன் ஆதல்; அனைத்து அறன்
ஆகுல நீர பிற."

என்னே அருமை!
பொன்னைக் கொடுத்தல்
பொருளை யீந்துவத்தல், மற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னென்ன நன் கொடைகள்
இருந்திடினும், மேலாக
மனத்தின் நிலை உயர்ந்தால்
மற்றதெல்லாம் அறமாகும்!

சசி: எதுவும் செலவில்லா
இனிய புதிய வழி!

நீதிக் கடமையின்பால்
நிறுத்தும் இதயங்களை!

விமல்: சோம்பல் கொடிது!
தொட்டுவிட்டால் மிச்சம் என்ன?
வேம்பாகும் வாழ்வு!
விடிவே இராது; கண்முன்
சாம்பி மடியும் குடியென்று
சாற்றும் குறள் கேளீர்!

"மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியும் தன்னினும் முந்து."

தமக்கும் பயனற்றுத்
தம் நிலையும் கெட்டுப்
பிறர்க்கும் உதவாப்
பிறப் பாகிச் சீரழிவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறீதரன்: ஊக்கமுடையார் மாட்டே
இவ்வுலகின் சிறப்பெல்லாம்!
நோக்கில் தெரிந்துவிடும்
நேற்று வான்மதிக் கேகி
நிகழ்த்திவந்த சாதனைகள்
ஆற்றல் எல்லாம் அந்த
அயரா உழைப்பென்பேன்!

ஆக்கம் எதுவுமின்றி
அயர்ந்து உறங்கிவிட்டுத்
தூக்க நிலையில்,
''தொடரும் விதி'' யிதென்று
காலம் கடத்திடுவோர்
காணும் நலன் ஏதோ?
எள்ளும் சொற் கேட்பார்
இவரே சுமையாவார்!

ரவி: காலத்தை வென்று; வரும்
காலமெலாம் தழுவும்
ஞாலப் பொது நெறிகள்
நன்று என்போம் இன்றைக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையின் உண்மைகளை
வகையாய்த் தெரிந்து, உலகப்
போக்கறிந்து சாற்றி, வான்
புகழடைந்தான் தமிழ் முனிவன்!

அரவிந்தன்: அறிவின் முதன்மையதை
ஆய்ந்தளித்து, மக்கள்
பெறுகின்ற யாவினிலும்
பெருமை யுடைத் தென்றே
பேசும் குறள் கேட்போம்!

''அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.''

உயிருக்கு உணவாகும்
உயர்ந்த அறிவன்றோ!

கற்பதுவும் கேட்பதுவும்
கருத்தை அறிவதுடன்
நிற்பதுந்தான் அறிவல்ல,
கற்ற அறிவு வாழ்வாய்க்
கனிந்து பயன் அளித்து
இப்புவியின் மாந்தர்
இன்னல் துடைத்திடலே
நற்புகழாம் மானிடர்க்கு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரதா: ''அறிவினுன் ஆகுவதுண்டோ, பிறிதின்நோய்
தந் நோய் போல் போற்ருக் கடை.''

''உலகம் தழீ இயது ஒட்பம்''

அறிவின் துணை கொண்டு
ஆக்கச் செயல் புரிந்து
செறியும் இடர் மாய்த்துச்
செகத்தினையே வாழவைப்போம்!

தன்னலத்தைக் குறைத்துப்
பொது நலனைப் பேணிச்
செம்மைக் குறள் நெறியைச்
சிந்தையிற் கொண்டுய் திடுவோம்!

சசிதரன்: பகுத்துண்டு வாழ்வதுவும்
பங்கிட்டு ஈவதுவும்
வகுத்துரைக்கும் கருத்துக்கள்
வாழ்வாய் அமையுதுபார்!
எண்ணச் சிறப்பிதுபோல்
எத்தனையோ! எத்தனையோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணில் அனவரதும்
வாழ்வு இனிமையுற
எண்ணி உதவி
எல்லோரையும் அணைத்துக்
கண்ணியமாய் வாழக்
காட்டும் புதிய வழி!

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்த வற்றுள் எல்லாம் தலை."

"பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழி யெஞ்சல் எஞ் ஞான்றுமில்."

ஆண்டு பலவாயும்
அருமைக் கருத்து, இன்றும்
நீண்டு உதவும் வகை
நினைக்கிற் பெருவியப்பே!

பிரபா: இன்றுள்ள ஆட்சியியல்
ஏற்கும் புதுப் பண்பெல்லாம்
அன்றே உணர்ந்து
ஆட்சி நெறி கூறி
நின்று சிறக்கும் குறள்!
அதன் நீர்மையினைக் காண்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு."

ஆட்சியாளர்க் கென்றும்
அறமே துணையாகின்
அன்பினது சாயல்
அதிலே நிழலாடும்.

மக்களுக்காம் ஆட்சி
மலர்ந்து உயிர் தழுவும்
தக்க முறை இதுவாம்!
ஆட்சி சிறப்பின்
அனைத்தும் சிறந்தமைதி
பூத்து விரியும்
புவியும் சுகம் காணும்.

சுகு: ஈரடியில் வாழ்க்கை
யியல் யாவும் பாடி
சீர் குவித்து நிற்கும்
திறனதனை என்னென்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப் பக்கம் சுவைத்திடினும்
இனிக்கும் கற்கண்டதுபோல்
தக்க சுவை தேர்ந்து தமிழ் செய்து
எமக் களித்தான்!
கற்கும் தோறும் வாழ்வுக்
கருத்தின் புது வீச்சு!

போற்றுவோம் குறள் நெறியை!
புரிந் ததன் வழி நிற் போம்!
சாற்றுவோம் அதன் பெருமை
தமிழ் அறியா உளம் வியக்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து

துணையே! எனதுயிருள்ளே
யிருந்து சுடர்விடுக்கும்

மணியே! எனதுயிர் மன்னவனே!
என்றன் வாழ்வினுக்கோர்

அணியே! என்னுள்ளத்தி லாரமுதே!
என தற்புதமே!

இணையே துனக் குரைப்பேன்
கடைவானில் எழுஞ்சுடரே!

—பாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து

ஞானச் சுடரொளியாக ஒளிர்ந்திடும்
நாயகனே! உம்மைப் போற்றுகின்றோம்!
ஈனச் செயல்களை எம் மனம் நாடாது
இன்னருள் பாலிக்க வேண்டும் இன்றே!

அன்புருவாகி அகிலத்தைக் காக்கின்ற
அத்தனே! உன்னைப் பரவுகின்றோம்!
இன்புற்று எல்லா உயிர்களும் வாழ்ந்திட
என்றும் கருணை பொழிந்தருள்வாய்!

வேதங்கள் போற்றிப் புகழ்ந்து துதிக்கின்ற
வித்தகனே! உம்மை வாழ்த்துகின்றோம்!
ஆய நற் பண்பு அறிவுத் திறன்கள்
அடைந் துயர்ந் தோங்க அருள் தருவாய்!

எல்லையில்லாத அறப் பொருளாகிய
ஈசனே! உம்மை இறைஞ்சுகின்றோம்
சொல் செயல் எண்ணங்கள் யாவினும் நல்லறத்
தூய்மை கமழத் துணைபுரிவாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரோர் பரவும் பரம் பொருளே! அருள்
பாலிக்கும் அன்பே உமைப் பணிந்தோம்!
போர் பகை வஞ்சனை இன்னல் படராத
புத்துலகாக்கத் திறன் அருள்வாய்!

வானும் புவியும் விதந்து இசைத்திடும்
வல்லபா! நின்னை வணங்குகின்றோம்!
ஊனுடல் தீயினும் உண்மை நெறிவாழும்
உள்ளத்தை ஈந்து உயர்த்திடுவாய்!

மானிலம் வாழக் கருணை பொழிகின்ற
வான்முகிலே நின்னைப் பாடுகின்றோம்!
மேன்மைக் குணங்களோடொற்றுமை பூண்டிங்கு
வெற்றி பெற்றோங்க அருள் புரிவாய்!

பீடுடைப் பெரு வான்பொறையே! உந்தன்
பெற்றியைப் பாடிப் பரவுகின்றோம்!
தேடுங் கல்வி உழைப் பறிவாண்மையில்
செம்மை யுற்றெழச் செய்திடுவாய்!

UNIVERSITY OF CEYLON
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடவுள் நல்லவர்

கடவுள் நல்லவர் கருணை உள்ளவர்
உலக மாந்தருக் குற்ற தந்தையர்.

அன்பு உள்ளவர் அன்பே ஆனவர்
அனைத்துலகையும் அணைத்து ஆள்பவர்.

தவறு செய்யினும் தம்மை மறப்பினும்
பெரிய மனத்துடன் பேணிக்காப்பவர்.

ஏழை செல்வர் என்றெண்ணிடாதவர்
இதய அன்பையே ஏற்று உவப்பவர்.

உலகம் யாவையும் படைத்த வல்லவர்
ஒளியும் உயிருமாய் உறைந்து நிற்பவர்.

நீதியுள்ளவர் நேர்மையானவர்
ஆதியானவர் அனைத்தும் அறிந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகச் சுற்றினில் உழன்று மாய்வோர்க்கு
உண்மையாகி நல்லொளியை ஈபவர்.

தூய அறிவொளிச் சோதியானவர்
ஆய நன்மைக்கோர் அளவில்லாதவர்

இன்னலால் நொந்து ஏங்கிக் கலங்குவோர்க்கு
அன்னையாகியே அன்பு செய்பவர்.

மனிதர் அனைவரும் மனிதராகிப் பின்
புனிதராக நற் போதம் அளிப்பவர்.

உழைப்பில் மூழ்குவார், மக்களுடனே உலவுவார்
அழைக்கு முன்னே வந் தருகில் நிற்பவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவா!

இறைவா! உமையே பணிந்தோம்
இனிதே வாழ்வைத் தொடர்ந்தோம்
உறைவாய் எமதுள்ளத்தே! அதை
உமதாய் ஈந்தோம் அமர்வாய்!

வாழ்வும் வழியும் நீயே!
வையத் தொளியும் நீயே!
சூழும் இன்பம் நீயே!
சுருதிப் பொருளும் நீயே!

அன்பே! கருணைக்கடலே!
அறத்தின் நிறைவே! வடிவே!
இன்ப எழிலே! அமுதே!
இறைவா! உமைநாம் பணிந்தோம்!

அருளின் ஒளியே வருக!
அறிவின் தெளிவே வருக!
இதயத் தொலியே எழுக!
இறைவா எமை ஆண்டருள்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லை காணாப் பொருளே!
எங்கும் நிறைந்த உயிரே!
சொல்லுக் கெட்டா உணர்வே!
துணையே! வாழ்வுச் சுடரே!

வேதப் பொருளே! முதலே!
விளங்கும் ஞான விளக்கே!
தீ தகற்றும் திருவே!
தேவா! உமைநாம் பணிந்தோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குரலொலி கேட்கிறேன்!

வித்தகம் யாவையும் விஞ்சியே
விளங்கிடும் தத்துவமாய் ஒளிர்
நித்தியா! உந்தன் குரல் எந்தன்
நெஞ்சில் ஒலித்திடக் கேட்கிறேன்!

உள்ளத் துணர்வுச் சுழிப்பினில்
உழலும் உயிரின் துடிப்பினில்
நல்ல தெளிவினை ஈந்திடும், உந்தன்
ஞானக் குரலினைக் கேட்கிறேன்!

உருவ மென்றோர் உரு அற்று,
உயிராய் எங்கும் நிறைந்துள்ள
ஒருவனே! உன் உயிர்ப்பினை
உலக மெங்கணும் காண்கின்றேன்!

ஓடும் அருவியின் ஓசையில்
உலவிடும் மென்காற்றசை வினில்
பாடும் இசைப்புட்கள் கானத்தில், உந்தன்
பண் இனித் தொலிக்கக் கேட்கிறேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில்லென்ற தென்றல் நுகர்வினில்
சிலிர்க்கும் புதுமை வடிவினில்,
எல்லையில்லா நீள் இயற்கையில்
இறைவனே! உன் எழில் காண்கின்றேன்!

வான் சுடர் சோதிக் கதிப்பினால்
வந்து சிதறும் ஒளி வீச்சில்,
ஆன அழகுக் கொலு எங்கும்
ஆண்டவா! உன்சாயல் தோயுதே!

தண்ணளி பூம்புனல் ஓட்டத்தில்
சதிராடும் மலர்க் கூட்டத்தில்
மின்னெனத் தோன்றிடும் நின் ஆட்டம்!
விழிப்பினில் கண்ணை விரிக்கின்றேன்!

ஏதலர் இன்னலால் வாடுவோர்
இருக்கும் இடம் தேடிப் போகுமுன்
பாத ஒலி செவிப் பட்டிட, கருணைப்
பண்பினை எண்ணி வியக்கின்றேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவன் சாயலர்

இறைவன் சாயலர்
இங்குள்ள மனிதர்;
இங்குள்ள மனிதரில்
இறைவனைக் கண்டு
அன்பு செய்;
செய்யும்
அன்பெல்லாம்
தேவனுக் காகும்.

ஆண்டவன் அன்பிலும்
அயலவர் அன்பிலும்
அடங்கிடும் வாழ்வு:

அனைத்து உயிர்களும்
ஆண்டவன் படைப்பு!
உயிர்களில் ஒன்றி
உலவிடும் தெய்வம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உள்ளன்போடு
உங்களில் ஒருவர்க்கு
உதவிடும் உதவிகள்,
எண்ணிப் பார்க்கின்
எனக்கே ஆகும்''
என்பது தேவனின்
இனிய குரலாம்!

''பசித் திருந் தேன்
பசிக் குணவளித்தீர்
ஆடையற் றிருந் தேன்
அன்புடன் ஈந்தீர்
இல்ல மற்றிருந்தேன்
இனிதே உதவினீர்''
என்றிவ் வாறு எழும்பும்
நன்றிக் குரலின்
நயம் உணர்ந்தாயா?

தெய்வ அன்பே, பிறர்
சேவையை நாடும்.

தேவனின் அன்பிங்கே
சிலிர்த்து அளாவித்
திகழ் வததனைத்
தெரிந்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிந்தும், பிறர்
நோவன செய்து
நொடிதல் அறனோ?

இறைவன் சாயலர்
இங்குள்ள மனிதர்,
இங்குள்ள மனிதரில்
இறைவனைக் கண்டு
அன்பு செய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகு

ஞான அழகு
நன்மை வடிவழகு
ஆன அழகிற் கெல்லாம்
ஆதி முதல் அழகு!

உண்மை அழகு
உலகின் முதல் அழகு
எண்ணத் தினிக்கும்
இறைவனோர் பேரழகு!

ஆன்ம அழகு
அழியா மறை யழகு
வானும் புவியும் ஏற்றி
வாழ்த்தும் திருஅழகு!

எல்லா அழகும்
எழில் தோயும் பேரழகு
சொல்லின் சுவைக்கெட்டாத்
தூய்மை ஒளிர் அழகு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீளும் நிறையழகு
நித்தியமாம் அழகு
ஆளும் அழகு
அனைத்துங் கடந் (த) அழகு!

தனக் குவமை யற்ற
தனித்துவமாம் அழகு
அனைத்துலக உயிர்ப்பாய்
அசையும் புது அழகு!

மூவா முழு அழகு
முத்தி நிறை யழகு
தேவா உன் பேரழகு
திவ்வியமான அழகு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலோனே!

வழிபடு மடியவர் இடர்களைந் தினியநல்
வரமருள் மறைபுகழ் முதலோனே!
ஒளியென ஒளிர்ந் துல கொளிபெற வழியதாய்
உலவிடு நலம்நிறை அருளோனே!

அதிசய உலகினை அதன் வள நிறைவினை
அளித்துயிர் அணைத்தினி தாள்வோனே!
பொது நல நெறியினைப் புலங்கொள உதவிடு
பொருள் நிறை மறையெழும் புகழோனே!

எங்கணும் விரிந்திடு இதயத்தின் கனிவினில்
இருந் தெழில் சிந்திள நகையோனே!
பொங்கிடு நலனெலாம் பொழிந் தருள் சுரந்து இப்
புவியினை மலர்விக்கும் பொறையோனே!

உணர்வொடு உயிர் ஆன்ம உறவொடு நிதம் நிதம்
உரை செய்து ஒளிர் ஞான எழிலோனே!
அயலுறை வாழ்க்கையி னுறவொடு கலந்திடு
அன்பெனும் பண்பதாய் அமைவோனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியெனப் பிழையினைத் தழுவிடா உணர்வினைத்
தந்திட முந்தும் மெய் வடிவோனே!
அரிதாம் இவ்வுல கனைத் தந்தமு மாதியும்
அனைத்தும் சங்கமமா மற்புதத்தோனே!

அமுதெழுஞ் சுவையென ஆகியே உலகெலாம்
அன்பு செய் தின்புறும் அழகோனே!
திகழுறு யாவுமாய்ச் சிறந்து சிறந்துயர்ந்து
சிந்தையில் தோய்ந்தெழு மறையோனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டேன்!

பாடக் கண்டேன் புகழ்;
பரவிப் பணிந்து தினமும்
நாடக் கண்டேன் உலகு,
நன்மை வடிவான வனே!

பெருகக் கண்டேன் உந்தன்
பேர ருளின் கனிவு;
மருவக் கண்டேன் உயிர்கள்
மலரக் கண்டேன் இனிமை!

தெரியக் கண்டேன் கருணை;
சிந்தை நிறைந்து எங்கும்
விரியக் கண்டேன் அன்பு,
விளங்கக் கண்டேன் உள்ளம்!

அனைத்தும் கண்டேன் இறைவன்
ஆணைக் கமைந்து சிறக்க;
நினைத்தேன்; கண்டேன் ஆற்றல்!
நினைவழிந்தேன் வியப்பில்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணங் கண்டேன் இறைவன்
வடிவங் கண்டேன் எங்கும்,
எண்ணங் கண்டேன் இனிமை!
இலங்கக் கண்டேன் புதுமை!

கூடக் கண்டேன் நன்மை;
குறுகி நலிந்து தீமை
ஓடக் கண்டேன் விரைந்து;
உயரக் கண்டேன் உலகு.

அருட்டக் கண்டேன் நெஞ்சை
அனைத்தும் நிறைந்த சக்தி;
தெருட்டக் கண்டேன் உண்மை
தெய்வீகத்தை உணர்ந்தேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாராய் இறைவா!

வாராய் இறைவா!
மனங் குளிர;
வாராய் தேவா!
வாழ்வருள.

உண்மை நாயகன்
உலகின் முதல்வன்
கண்ணியம் நிறைந்த
கடவுளர் வருகிறார்!

மனிதரைத் தேடி
மகிழ்ந் துறவாடிடப்
புனித இடம் விட்டே
புழுதியில் வருகிறார்!

பூரண பொற்குடம்
புது அலங்காரம்
தோரண அணியின்றித்
தூயவன் வருகிறார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மில் ஒருவராய்
நடந்தும் விரைந்தும்
'தன்மக்கள்' எனும் அந்தத்
தயையுடன் வருகிறார்!

அந்தமில் ஆதி
அனைத்திற்கும் கர்த்தா!
எந்த ஏற்பாடு மின்றி
எளிமையாய் வருகிறார்!

அலைப்பவர் அலைந்திட
அவர்களுக் கருகினில்
தலைமுறை உறவெல்லாம்
தாங்கியே வருகிறார்!

ஆவலாய் எம்முடன்
அளவளாவிட அன்புத்
தேவனே வருகிறார்!
சேரவா! சேரவா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர் கொண்டு செல்வோம்
இனியரைக் காண்போம்,
இதயத்து அன்பை
எடுத்து முன் வைப்போம்!

வாராய் இறைவா!
மனங் குளிர;
வாராய் தேவா!
வாழ்வருள.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணர்வில் இறைவன்........!

உள்ளக் கதவைத் திற
அங்கே
உன் உணர்வில்
இறைவன் விழிப்பான்;

உள்ளக் கதவைப் பூட்டி
இறைக்கு நீ
உதவும் வகையாய் நினைத்து
அள்ளித் தெளிக்கும்
மலர்கள்,
அண்டி ஏற்றும் தீபம்,
சொல்லித் துதிக்கும்
சொற்கள், இவற்றின்
தூய்மை என்ன ஆகும்?

உள்ளக் கதவைத் திற
அங்கே
உன் உணர்வில்
இறைவன் விழிப்பான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவா! இறைவா!
என்று, நிதம்
எடுக்கும் குரல்தான் என்ன?
இறைவன் எண்ணம்
தெளிந்து அதை
இயற்று வோரே மேலாம்!

ஆன்மா அதனைப் பூட்டி
அழகாய் அணிந்து கோவில்
போனல் என்ன? கோவில்
புகு முன் உன்னை உணர்வாய்.

உடன் பிறப்பு வருந்த
உதவாது மாறு கொண்டு
இடம் பிடிக்க முன்னே
இடித்துச் செல்வ தென்ன?

பதம் சிதைந்த ஆட்டம்
பார்ப்போர் அறியாவிடினும்
இதம் நிறைந்த ஒன்று
உன் உள்ளே
எடுத்துச் சொல்லும் மெல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MIC FILMED
11663
4/11/91



உள்ளக் கதவைத் திற
அங்கே
உன் உணர்வில்
இறைவன் விழிப்பான்!

கோவில் மட்டுமல்ல
இறைவன்
குடியிருக்கு மிடமாம்,
பூவில் எல்லா இடமும்
உயிராய்
அவன் புனிதம் உலவக் காண்பாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
LIBRARY

Class No..................

Acc. No..................

This book is returnable on or before the last date stamped below.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசை அரங்கு

புதிதாய் மலர்ந் தோம்
பொற்காலப் புத்திரர் நாம்
பூக்கும் உலகின்
புதிய ஒளி நாமாவோம்.

பாடு தம்பி பாடு!

உயர்ந்த மனிதப் பண்பு யாவும்
உலகளாவப் பாடு — அவை
ஓங்கி வளரப் பாடு

தாயகம்

மதங்களுக் குள்ளே ஓர்மை;
மக்கள் நெஞ்சத் தன்புலா
இனங்களுக்குள் ஐக்கியம்,
இனிய ஒற்றுமை வாழ்வகம்!

தீபாவளி

அறம் வென்ற தென்று
ஆர்த் தாடிப்பாடிச்
சிறந் தொன்று கூடும்
தீபாவளி நாள்!

இளமை

எண்ணங்கள் நூறு,
இதயத் துடிப்புடனே
பின்னிப் பிணைந்து
பேசும் பருவமடா!

மகாவலியாள்!

ஏடி! எழில் மாதே
இன்னும் நலன் சிறக்க
வாடி வடபாலும்.........

"உவட்டாததனை யாதுணர்வெனும் பசியெடுத்துள்ளமுஞ் செவியும் உருகிநின் றுண்ணும் பெருந்தமிழமுதம்" என்ற நல்லுரைக்கேற்ப திரு. ச. அமிர்தநாதர் "பிள்ளைத் தமிழ்" என்னும் பெயர்வாய்ந்த கவிதைத் திரட்டொன்றினை நவமாய் இயற்றி இன்பத்தமிழன்னை களிகூர நற்றமிழ் பேசும் மக்கள் இதயம் பூரிக்க வெளிப்படுத்துகின்றார்.

வித்துவான் F. X. C. நடராசா.

*Mr. S. Amirthanather: a true gentleman and a sincere friend:*

"..............................
So shines a good deed
in a naughty world"

*With all [illegible] bright future.*

Dr. K. THEIVANANTHAM PILLAI
Faculty of Education University of Malaya.
MALAYSIA.

275528
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org